பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 02 புதன்கிழமை 18.08.2021 கதிர் 152

## வவுனியாவில் இன்றும் 109 பேருக்குத் தொற்று!

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் மேலும் 109 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பு ☞2



## மங்கள காலமானார் என்ற செய்தி உண்மையில்லை

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர காலமானார் என்று பரவி வரும் செய்தியில் உண்மையில்லை என அவருக்குச் சிகிச்சையளித்து வரும் வைத்தியர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மங்கள சமரவீர கொரோனாத் தொற்றுக்குள்ளாகி, கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மங்கள சமரவீர காலமானார் என இன்று காலை முதல் சமூக வலைத்தளங்களில் போலிச் ☞2

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரனுக்குக் கொரோனா

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரனுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவருக்கு இன்று மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையின்போதே தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதன்போது அவருடன் பழகியவர் என்ற அடிப்படையில், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுயதனிமைப்படுத்தலில் இருந்தார்.


இந்தநிலையில், இன்று வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.



இதையடுத்து அவர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# நாட்டை முற்றாக முடக்கவேமாட்டேன்; கடும் பயணக்கட்டுப்பாடுகளே அமுல்!

### அமைச்சரவை சந்திப்பில் கோட்டாபய திட்டவட்டம்



**கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், நாட்டை முழுமையாக முடக்காது, பயணக்கட்டுப்பாடுகளைக் கடுமையாக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இதுதொடர்பில் உரிய தரப்பினருக்கு அவர் பணித்துள்ளார் எனவும் அறியமுடிகின்றது.**

**நாடளாவிய ரீதியில் இரவு 10 மணிமுதல் அதிகாலை 4 மணிவரையிலான ஊரடங்கு சட்டம், கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.**

**இந்த ஊரடங்கு உத்தரவை, வார இறுதி நாள்களில் முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவித்திருந்தன.** ☞2



## வெள்ளிக்கிழமை தொடக்கம் கிளிநொச்சி நகருக்கும் பூட்டு!

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று வேகமாக அதிகரித்து வருகின்றமையைத் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக கிளிநொச்சி நகர வர்த்தகர்கள் அனைவரும் எதிர்வரும் 20ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) முதல் 28 ஆம் வரை தங்களது வர்த்தக நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானித்துள்ளனர் என கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். ☞2

## நாட்டை நாமே முடக்குவோம்!

### தொழிற்சங்கங்கள் கூட்டாக அறிவிப்பு

நாட்டில் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 10 நாள்கள் கட்டாயப் பொதுமுடக்கத்தை முன்னெடுக்க நேரிடும் எனப் பல்துறைசார் தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

கொரோனாத் தொற்று மோசமடைந்துவரும் நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக அரசு பொது முடக்கம் தொடர்பில் தீர்மானிக்க வேண்டும் எனவும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

அண்மை நாள்களாக கொரோனாத் தொற்றால் நிலைமை மோசமடைந்துள்ளது. பொதுமுடக்கத்தை அறிவிக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். ☞2



## எறிகணை மீட்பு!

(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் - வேட்டையடைப்புப் பகுதியில், இன்று காலை எறிகணை ஒன்று மீட்கப்பட்டுள்ளது. ☞2



## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 55 ஆயிரம் பேர் இதுவரை சிக்கினர்

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 55 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இன்று காலை 6 மணியுடன் நிறைவு பெற்ற கடந்த 24 மணி நேரத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் 284 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. ☞2

## வவுனியா வடக்கு செயலருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

வவுனியா வடக்கு பிரதேச செயலார் இ.பிரதாபன் மற்றும் அங்கு பணிபுரியும் 2 உத்தியோகத்தர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மற்றும் அங்கு கடமையாற்றும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டது. இதையடுத்து அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை ☞2

## நாட்டை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன்அந்தஊரடங்குஉத்தரவை ஒரு மாதத்துக்கு முழுமையாக பிறப்பிப்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அந்தத் தகவல்கள் தெரிவித்திருந்த நிலையிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு பணித்துள்ளார் என அறியமுடிகின்றது.

இந்நிலையில், தனது தலைமையில் நேற்றிரவு நடைபெற்ற வாராந்த அமைச்சரவை சந்திப்பின்போதே, நாட்டை முழுமையாக மூடமாட்டேன் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

நாட்டை முழுமையாக மூடினால், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாத நிலைமையொன்று ஏற்படும். அன்றாடம் வாழ்க்கை நடத்தும் ஒரு பிரிவினர் கடுமையான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் அமைச்சரவைக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்குத் தடுப்பூசி ஏற்றலைத் துரிதப்படுத்த வேண்டும். அதற்குத் தேவையானசகலநடவடிக்கைகளையும் எடுக்குமாறும் உரிய தரப்பினருக்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

## மங்கள...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் வருகின்றன.

இது குறித்து மங்கள சமரவீரவின் ஊடகப் பிரிவினரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தி என்று உறுதிப்படுத்தினர்.

அத்துடன், அவரது நிலைமை கவலைக்கிடமாக இருந்தாலும் வைத்தியர்கள் அவருக்குத் தொடர்ந்து சிகிச்சையளித்து வருகின்றனர் என்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தினர்.

## வவுனியாவில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில இன்று வெளியாகின.

அதற்கமைய 109 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில், 42 பேர் நோய்க்கான அறிகுறிகள் தென்பட்ட நிலையில் தாமாக முன்வந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை என்பவற்றில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்த நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுயதனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

## தனிமைப்படுத்தல்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகக்கவசம் அணியாமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறி நடமாடிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 55 ஆயிரத்து 173 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## எறிகணை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல்லாவி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, குறித்த எறிகணை மீட்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஆலங்குளம் குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு, குறித்த எறிகணை செயலிழக்கப்பட்டுள்ளது.

## நாட்டை நாமே...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், அந்தக் கோரிக்கைகளை அரசு புறந்தள்ளிவருகின்றது. இந்தநிலையில், தொழிற்சங்கங்கள் கூட்டாக இதனை அறிவித்துள்ளன.

இலங்கையில் கொரோனா திரிவுகள் உருவாகும் வரை பார்த்துக்கொண்டிராது, நாட்டை அரசு முடக்க வேண்டும். இதனை செய்யத் தவறினால், அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து நாட்டை முடக்கும் முயற்சியில் ஈடுபடுவோம் என்று சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் இதன்போது தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அவகாசம் வழங்கப்படும். ஒன்றும் நடக்காவிடின் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நாட்டை முடக்குவோம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதாரத்துறை சார்ந்த தொழிற்சங்கங்கள் தமது கடமைகளை உரிய வகையில் முன்னெடுக்கின்றன. ஏனைய அனைத்துத் துறைகளையும் சேர்ந்த தொழிற்சங்கங்களை இணைத்து நாட்டை முடக்குவோம் என்றும் சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியா...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர்களுக்குக் கொரோனா தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

மூவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதேச செயலகத்தில் பணிபுரியும் ஏனைய உத்தியோகத்தர்களுக்குச் சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது.

(இன்னுமொரு செய்தி 08ஆம் பக்கத்தில்)

## வெள்ளிக்கிழமை...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் இன்று மாலை கிளிநொச்சி ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் இ.விஜயசிங்கம், செயலாளர் ச. பாஸ்கரன், பொருளாளர் க.ஆனந்த வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டு இந்தத் அறிவித்தலைத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாளுக்கு நாள் கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர். நேற்று மாத்திரம் 257 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதுவொரு ஆபத்தான நிலைமை. எனவே, வர்த்தகர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது வர்த்தக நிலையங்களை சில நாள்களுக்குப் பூட்டி தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

அந்தவகையில் எதிவரும் 20ஆம் திகதி முதல் 28 திகதி வரை மருந்தகங்கள், வாகனத் திருத்தகங்கள் தவிர ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிகளில் வர்த்தகர்கள் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகில் உள்ள கொரோனா பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் தங்களைப் பரிசோதித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது மக்களைப் பாதுகாப்பதற்கு அனைத்து வர்த்தகர்களையும் பூரண ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர்.

**வேலைவாய்ப்பு**
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு - 076 740 3814



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் -onlinekathir.com

## நாமாகவே முடிவு எடுப்போம்

நாட்டைப் பேரிடராக தாக்கியிருக்கும் கொரோனாப் பெருந்தொற்று விடயத்தில் அரசையும் ஆட்சித் துறையையும் நம்பி இருப்பதில் பயனில்லை, நாமாக முடிவெடுத்துக் காரிய மாற்றினால்தான் சரி என்ற எண்ணம் பல இடங்களிலும் நகரங்களிலும் தோன்றியுள்ளது.

நாட்டை முடக்குங்கள், கட்டுப்பாடுகளை விதியுங்கள், போக்குவரத்தையும் அசைவியக்கத்தையும் குறைக்கச் செய்யுங்கள் என்றெல்லாம் அரசிடம் பலதரப்பினரும் வேண்டுகோள்களை விடுத்தபோது அவை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காக அவமேயாகிக் கொண்டிருந்தன.

மருத்துவ – சுகாதார துறையைச் சேர்ந்த நிபுணர்கள், அவர்களின் அமைப்புகள், ஆய்வாளர்கள் எனப் பல தரப்பினரும் மன்றாடிக் கேட்டும் நாட்டின் தலைமை தன் பொருளாதார நெருக்கடியை முன்னிறுத்தி நடவடிக்கை எடுக்க மறுத்து வந்துள்ளது,

இலங்கையில் உள்ள முப்பது மருத்துவ – சுகாதார நிபுணர்களின் ஆய்வுகளின் அடிப்படையில் உலக சுகாதார ஸ்தாபனம் எழுத்தில் இந்த சிபாரிசை – பரிந்துரையை – இலங்கை அரசுத் தலைமைக்கு வழங்கியிருந்தது.

ஆனாலும் அசைய மறுத்து தன் நிலையில் உறுதியாக நிற்கின்றது ஆட்சிப்பீடம்.

மருத்துவ நிபுணர்கள் வலியுறுத்தினால் நாட்டை அரசு முடக்கும் என்று அரசின் அமைச்சர் ஒருவர் இப்போதும் கதை விடுகின்றார். அதுதான் இத்தனை அமைப்புகள், இத்தனை நிபுணர்கள், இன்ன, இன்ன திகதிகளில் நாட்டின் தலைவருக்கு இவ்வளவையும் விவரித்து பரிந்துரை தந்துள்ளனரே, எங்கே நடவடிக்கை என்று கேட்டால் ஆட்சித் தரப்பிடம் பதில் இல்லை.

பாதிப்பின் உச்ச நெருக்கடியை நாட்டின் சுகாதார – மருத்துவ சேவைதான் எதிர்கொண்டுள்ளது. போகின்ற போக்கில் இதே வேகத்தில் கொரோனா வைரஸ் தன் கைவரிசையைத் தொடர்ந்து காட்டுமானால் மருத்துவ சேவையே முழுமையாக முடங்கும் பேராபத்து நேர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சமூகத் தொற்றாகக் கொரோனா வைரஸ் பரவல் மாறி நாள்களாகிவிட்டது.

அரசு நாட்டை முடக்க மறுத்து, வைரஸ் தொற்றுப் பரவலுக்குக் களம் அமைத்து, இடம் கொடுத்து, வசதி செய்து நிற்கின்றது

பல நகரங்களின் வர்த்தகர்கள், பொது அமைப்பினர் பார்த்தார்கள், இது சரிப்பட்டு வராது என்ற நிலைமையில் தாமாகவே தத்தமது நகரங்களில் வர்த்தக நடவடிக்கைகளை முடக்கத் தலைப்பட்டிருக்கின்றார்கள்.

நாடு முழுவதும் நேற்று வரை முப்பத்தியொரு நகரங்களில் இப்படி வர்த்தக நடவடிக்கைகள் அந்தந்த பிரதேசத் தரப்புகளினால் முடக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பட்டியலில் மேலும் 15 நகரங்கள் இன்று இணைகின்றன.

திருகோணமலை நகரசபை, சுற்றாடலும் பட்டினமும், கேகாலை, சிலாபம், அம்பாறை, வென்னப்புவ, கெக்கிராவை, மொனராகலை, திவுலுப்பிட்டிய, தெரணியகல, ஒர்கஸ்மன் கஹண்டிய, வாதுவை, பத்தரகொட, றிகஸ்கட ஆகிய பிரதேசங்களில் வர்த்தக நடவடிக்கைகள் தாமாகவே நிறுத்தப்பட்டுள்ளன.

அம்பலாங்கொடை, மரடகஹமுல்ல, தங்கொட்டுவ, சேருநுவர, பலபத்வல, உல்பத, தங்காலை, பதுளை, பலாங்கொடை, வலப்பனை, பண்டாரவளை, எம்பிலிப்பிட்டிய, மாத்தறை ஆகிய பகுதிகளிலும் வர்த்தக நிலையங்கள் தடைப்பட்டு உள்ளன.

இந்த நகரங்களில் சில, ஒரு வாரத்துக்கும், மற்றும் சில இரண்டு வாரங்களுக்கும் வர்த்தக நிலையங்களை மூடித் தத்தமது நகரங்களில் போக்குவரத்து மற்றும் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி, தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

இதேசமயம் ஹற்றன் போன்ற முக்கிய நகரங்களிலும் இவ்வாறு உள்ளூர் மட்டத்தில் கட்டுப்பாடுகளை விதித்து முடக்கங்களை கொண்டுவருவது குறித்து தீவிரமாக சிந்திக்கபடுவதாகத் தெரிகிறது.

பல நகரங்களிலும் திடீர் திடீரென தொற்றுப் பரவலைக் காரணம் காட்டி வங்கிகள், வர்த்தக கடைத் தொகுதிகள், அரசு அலுவலகங்கள் இழுத்து மூடப்படும் நிலைமையும், அதனால் பரபரப்புகள், குழப்பங்கள், அசௌகரியங்கள் ஏற்படுகின்ற சூழலும் காணப்படுகின்றன.

ஒட்டுமொத்தமாக ஒரே முறையில் நாட்டை முடக்கி, பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அரசு உதாசீனம் செய்து வரும் நிலையில் நகரங்கள் தாங்களாகவே முடிவு எடுக்கும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது. நகரங்களின் இந்நடவடிக்கை சுயாதீனச் செயற்பாட்டுக்கு முன்னுதாரணமாகும்.

# கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த அரசியல் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்து



அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கொவிட் வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான குழு ஒன்றை அமைக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அதேபோல் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக கிராமிய மட்டத்தில் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய அத்துரலியே ரத்ன தேரர், நிபுணர்கள் குழு ஒன்றின் மூலம் கொவிட் தொற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய வைத்திய முறைகள் இந்த கொவிட் நோயை காட்டுப்படுத்தும் விடயத்தில் சிறந்த பெறுபேறு கிடைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கிங் நெல்சன் கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களுக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வளேபொட கருத்து தெரிவிக்கையில்,

எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டம் காரணமாகவே கொவிட் தொற்று பரவியது.

இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி கருத்து தெரிவிக்கையில்,

ஆயுர்வேத வைத்திய சாலைகளில் சுமார் 5 ஆயிரம் பேர் கொவிட் நோய்க்காக சுதேச வைத்திய சிகிச்சையை பெற்று வருகின்றனர்.

இதன்போது எவரும் உயிரிழக்கவில்லை. மேலும் 5 ஆயுர்வேத வைத்திய சாலைகள் விரைவில் கொவிட் சிகிச்சை வைத்தியசாலைகளாக மாற்றி அமைக்கப்படும்

நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கருத்து தெரிவிக்கையில் –

கொவிட் தொற்று பரவி ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள போதிலும், இடர் முகாமைத்துவ சட்டமூலத்தின் கீழ் தேசிய சபை அமைக்கப்படவில்லை. கொவிட் தொற்றை கட்டுப்படுத்திய அனைத்து நாடுகளும் நாட்டை மூடியே நிலைமையைசீர்செய்தன.–என்றார்.

# அரசு முட்டாள் தீர்மானங்கள் எடுப்பதை நிறுத்தி விட்டு தேசிய அனர்த்த நிலைமையை பிரகடனப்படுத்த வேண்டும்

## விஜித ஹேரத் வலியுறுத்தல்

அரசாங்கம் தற்போதாவது தான்தோன்றித்தனமாக செயற்படுவதை நிறுத்திக்கொண்டு தேசிய அனர்த்த நிலைமை ஒன்றை பிரகடனப்படுத்தவேண்டும். அத்துடன் கொவிட்டை கட்டுப்படுத்த அரசாங்கம் முறையாக செயற்படவில்லை என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கொரோனா வைரஸ் தொற்று(கொவிட்19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

நாட்டை முடக்குவதற்கு ஆரம்ப கட்டத்தில் இருந்து இதனை மேற்கொள்ள அரசாங்கம் தவறியது.

ஏப்ரல் மாதம் இறுதி வாரத்தில் அரசாங்கம் இந்த முடக்கும் தீர்மானத்தை எடுத்திருந்தால் புத்தாண்டு கொத்தணி ஏற்பட்டிருக்காது.

நியுசிலாந்தில் கொவிட் தொற்றாளர் ஒருவர் இனம் காணப்பட்டதுடன் அந்த நாட்டு பிரதமர் அந்தப் பிரதேசத்தையே முடக்கத் தீர்மானித்தார்.

ஆனால் எமது நாட்டில் அரசாங்கம் முறையான தீர்மானங்களை எடுப்பதற்கு தவறி வருவதால் மக்கள் தங்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு சுயாதீன கட்டுப்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர்.

அதனால் அரசாங்கம் தற்போதாவது தனது தான்தோன்றித்தனமான, முட்டாள்தனமான தீர்மானங்களில் இருந்து விடுபட்டு, நாட்டின் நிலைமையை உணர்ந்து தேசிய அனர்த்த நிலைமை ஒன்றை பிரகடனப் படுத்தவேண்டும்.

அதன் மூலம் தேசியக் கொள்கை ஒன்றை அமைத்து இதனைக் கட்டுப்படுத்த முறையான வேலைத்திட்டம் அமைக்கவேண்டும். – என்றார்.

# ஆஸ்திரேலியாவிலுள்ள இலங்கை சமூகத்தால் 2 தொன் மருத்துவ உபகரணங்கள் வழங்கல்

விக்டோரியா தெற்கு மற்றும் மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கை சமூக சங்கங்கள் மற்றும் நலன் விரும்பிகளால் இரண்டு தொன் மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மெல்போர்னில் உள்ள இலங்கை துணைத் தூதரகம், 2021 ஜூன் 9 மற்றும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி மெல்போர்னிலிருந்து கொழும்பு நேரடி விமானங்கள் மூலமாக இந்த மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த கடினமான காலங்களில் இலங்கையில் விலைமதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்ற உதவுவதற்கு சரியான நேரத்தில் நன்கொடை வழங்கிய அனைத்து சங்கங்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கும் மெல்போர்னில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் நன்றிகளை தெரிவித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# எந்தவொரு நாட்டுக்கும் எங்களால் ஆபத்தில்லை

## தலிபான்கள் அறிவிப்பு


ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தை தலிபான்கள் கைப்பற்றி உள்ளனர். அவர்கள் மத கோட்பாடுகளை கடுமையாக அமுல்படுத்துபவர்கள் என்பதால், பலர் நாட்டை விட்டு தப்ப முயன்று வருகிறார்கள். தப்பிச் செல்லாத மக்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி உள்ளனர். பரவலாக அச்சம் நிலவி வருகிறது.

ஆப்கானிஸ்தானில் அரசுப் படைகளை வீழ்த்தி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியிருக்கும் தலிபான்கள், முதல் முறையாக செய்தியாளர் சந்திப்பை நடத்தியிருக்கின்றனர். இந்த சந்திப்பில் எதிர்காலத்தில் அவர்களுடைய செயல்பாடு, திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்திருக்கின்றனர்.

தலிபான்கள் செய்தி தொடர்பாளர் கூறுகையில், ஆப்கானிஸ்தானில் சண்டை முடிந்தது. காபூல் மீண்டும் இயல்புநிலைக்கு திரும்பும். போரின் போது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் ஒரு விபத்து தான், உள்நோக்கத்துடன் கூடியது கிடையாது. தாலிபான்கள் அனைவரையும் மன்னித்து விட்டது, முன்னாள் இராணுவ வீரர்கள், வெளிநாட்டு படைகளுக்காக வேலை செய்தவர்கள் என யார் மீதும் எங்களுக்கு பழிவாங்கும் எண்ணம் கிடையாது. அவர்களின் வீடுகளை சோதனையிடமாட்டோம்.

ஆப்கானிஸ்தானில் இருந்து எந்த நாட்டிற்கும் அச்சுறுத்தல் இருக்காது என்பதை உலக நாடுகளுக்கு உறுதி அளிக்கிறோம். இஸ்லாமிய சட்டத்தின் கட்டமைப்புக்கு உட்பட்டு பெண்களின் உரிமைகளுக்கு முழு மதிப்பளிப்போம், ஊடக சுதந்திரமும் அளிக்கப்படும் என்றார்.

# ஆப்கானின் அதிபர் எங்கே இருக்கிறார்?



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தலிபான் தீவிரவாதிகள் நுழைந்ததும் அந்த நாட்டின் அதிபர் அஷ்ரப் கனி தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு நாட்டை விட்டு தப்பி ஓடினார்.

அவர் மூட்டை மூட்டையாக பணத்தை எடுத்துக்கொண்டு ஹெலிகொப்டரில் தஜிகிஸ்தானுக்கு தப்பி சென்றார் எனத் தகவல்கள் வெளியாகின. அதே சமயம் அவர் கஜகஸ்தான் நாட்டுக்கு சென்றார் என மற்றொரு தரப்பு தகவல்கள் தெரிவித்தன. ஆனால் கஜகஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே அஷ்ரப் கனி தங்கள் நாட்டுக்கு வரவில்லை என அதிகாரப்பூர்வமாக அறிவித்தன.

இதற்கிடையில் அதிபர் அஷ்ரப் கனி மற்றும் ஆப்கானிஸ்தானின் பிற தலைவர்கள் உஸ்பெகிஸ்தான் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டன. இந்த நிலையில் உஸ்பெகிஸ்தான் நாடும் அஷ்ரப் கனி தங்கள் நாட்டில் இல்லை என தெரிவித்துள்ளது. இதற்கிடையில் அஷ்ரப் கனி தற்போது ஓமன் நாட்டில் இருக்கிறார் எனவும் அவர் அமெரிக்காவில் குடியேற முடிவு செய்திருக்கிறார் எனவும் ஆப்கானிஸ்தான் அதிகாரிகளுக்கு நெருக்கமான வட்டாரம் தெரிவித்துள்ளது.

# சுடோக்கு புதிர் விளையாட்டின் ‘காட்பாதர்’ மகி காஜி காலமானார்

உலகம் முழுவதும் சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பி விளையாடும் விளையாட்டுக்களில் சுடோக்கு எனப்படும் புதிர் விளையாட்டும் ஒன்றாகும். இந்தப் புதிர் விளையாட்டின் காட்பாதர் என அறியப்படும் மகி காஜி காலமானார். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அவருக்கு வயது 69. புற்று நோய் பாதிப்பால் சிகிச்சை பெற்று வந்த மகி காஜி சிகிச்சை பலனளிக்காமல் கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுடோக்கு என்பது 9X9 என அமைந்த 81 சிறுகட்டங்கள் அடங்கிய ஒரு பெரிய கட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுடன், ஒரு குறிப்பிட்ட பண்பு பொருந்துமாறு எண்களைக் கொண்டு விளையாடும் ஒரு புதிர் விளையாட்டு ஆகும். இந்த விளையாட்டு 18 ஆம் நூற்றாண்டில் சுவிட்சர்லாந்தை சேர்ந்த கணிதவியலாளர் லியோன் ஹார்ட் யூலர் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

சுடோக்கு புதிர் விளையாட்டின் நவீன வடிவம் அமெரிக்காவில் முறைப்படுத்தப்பட்டதாக சில நேரம் கூறப்பட்டாலும், 1980களில் தனது நிகோலி என்ற இதழில் வெளியிட்டு இந்த விளையாட்டை பெருமளவு பிரபலப்படுத்தியவர் மகி காஜி என்றே சொல்லப்படுகிறது. ஒவ்வொரு எண்ணும் ஒற்றையாக இருக்க வேண்டும் என பொருள்படும் ஜப்பானிய சொற்றொடரின் சுருக்கமான சுடோக்கு என்ற பெயரையும் அவரே உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

# பயணக் கட்டுப்பாடுகளை தளர்த்தியது இங்கிலாந்து




இந்தியாவில் கொரோனா வைரஸ் 2வது அலை மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியதால் கடந்த மே மாதத்தில் இங்கிலாந்து இந்தியாவுக்கு பயணக் கட்டுப்பாடு விதித்தது.

இந்த நிலையில் இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸ் இரண்டாவது அலை கட்டுப்படுத்தப்பட்டு தினசரி பாதிப்பு மற்றும் உயிரிழப்பு குறைந்து வருகிறது.

இதனைத்தொடர்ந்து இந்தியாவுக்கான பயணக் கட்டுப்பாடுகளை இங்கிலாந்து தளர்த்தியுள்ளது. இதன்படிஇந்தியாவில் இருந்து திரும்பும் தடுப்பூசி முழுமையாக போட்ட இங்கிலாந்து குடிமக்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் அனைவருக்கும் 8 மாதத்தில் ‘பூஸ்டர் டோஸ்’


உலகளவில் கொரோனாவால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நாடு அமெரிக்கா. இங்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசி போட்டு 8 மாதங்கள் ஆன நிலையில் வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி போட்டுக்கொள்ள வல்லுனர்கள் பரிந்துரைக்க உள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. அங்கு டெல்டா வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றநிலையில், இந்த பூஸ்டர் டோஸ் தடுப்பூசி அதில் இருந்து பாதுகாப்பை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வல்லுனர்கள் பரிந்துரைக்குபின்னர் எப்.டி.ஏ. என்றுஅழைக்கப்படுகிற அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் நிர்வாகம் இந்த வாரம் தனது ஒப்புதலை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே நோய் எதிர்ப்புசக்தி குறைவாக இருப்பவர்களுக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசி (பைஸர்) போடுவதற்கு அமெரிக்க சுகாதார அதிகாரிகள் பரிந்துரைத்து இருக்கின்றமை நினைவுகூரத்தக்கது.



# எழுவர் விடுதலை விவகாரத்தில் நீதிமன்றம் முடிவெடுக்க முடியாது!

## உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதிகள் தெரிவிப்பு




29 ஆண்டுகளாக சிறையிலிருக்கும் தன்னை விரைவாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் ரவிச்சந்திரன் வழக்குத் தொடர்ந்திருந்தார். அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, 7பேரின் விடுதலை தொடர்பான முடிவு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டது. ஆளுநர், குடியரசுத் தலைவரின் முடிவுக்காக அனுப்பியுள்ளார். ஆகவே, இந்த விவகாரம் குடியரசுத் தலைவரின் முடிவுக்காக தற்போது காத்திருப்பில் உள்ளது என தமிழக அரசுத்தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நீதிபதிகள், இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எத்தகைய முடிவையும் எடுக்க இயலாது. முடிவுகள் எடுக்கப்படும் நிலையில், மனுதாரர் அவற்றை எதிர்த்து வழக்குத் தொடரலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் ரவிச்சந்திரன் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனு ஒன்றினைத் தாக்கல் செய்திருந்தார். அதில், 'ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு 29 ஆண்டுகளாக சிறையில் உள்ளேன். ஏழு ஆண்டுகள், 10 ஆண்டுகள், 14 ஆண்டுகள், 20 ஆண்டுகள் சிறையில் இருந்தவர்கள் பலர் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்ட நிலையில், அரசியல் தலையீடு காரணமாக நான் இன்னமும் விடுதலை செய்யப் படவில்லை.

29 ஆண்டுகளாக தொடர்ந்து சிறையில் இருக்கும் நிலையில் மன உளைச்சல் ஏற்படுவதோடு, உடல் நலமும் பாதிக்கிறது. 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் இருப்பவர்களின் முன்கூட்டிய விடுதலைக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டமும் மனித நேய அடிப்படையில் வழிவகுக்கிறது.

தமிழக சட்டமன்றத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் 7 பேரை விடுதலை செய்வது தொடர்பான சட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருப்பில் உள்ளது. இது குறித்து விரைவில் முடிவெடுக்கக்கோரி மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

1,600 ஆயுள் தண்டனைக் கைதிகளின் முன்கூட்டிய விடுதலைக்கான மனுக்கள் பரிசீலிக்கப்பட்டுள்ள நிலையில் எங்களது விடுதலை தொடர்பான சட்ட பிரேரணை 22 மாதங்களுக்கும் மேலாக காத்திருப்பில் உள்ளது. ஆகவே 29 ஆண்டுகளாக சிறையிலிருக்கும் என்னை விரைவாக விடுதலை செய்ய உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும். எனக் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள், பாரதிதாசன், நிஷாபானு அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசுத்தரப்பில், இதே வழக்கில் சிறையில் இருக்கும் நளினி, இதே கோரிக்கையுடன் தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஆகவே, இந்த மனுவையும் தள்ளுபடி செய்ய வேண்டும். மேலும் 7 பேரின் விடுதலை தொடர்பான முடிவு ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆளுநர், குடியரசுத் தலைவரின் முடிவுக்காக அனுப்பியுள்ளார்.

ஆகவே, இந்த விவகாரத்தைப் பொறுத்த வரை குடியரசுத் தலைவரின் முடிவுக்காக தற்போது காத்திருப்பில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், இந்த விவகாரத்தில் நீதிமன்றம் எத்தகைய முடிவையும் எடுக்க இயலாது. முடிவுகள் எடுக்கப்படும் நிலையில், மனுதாரர் அவற்றை எதிர்த்து வழக்குத் தொடரலாம் எனக்கூறி வழக்கை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்துள்ளனர்.

# மேலும் 120 இந்தியர்கள் ஆப்கானிலிருந்து திரும்பினர்

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கும் அந்த நாட்டு அரசுக்கும் இடையே நடந்து வந்த போர் முடிவுக்கு வந்து தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

'ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசம் போய்விட்டது' என்ற செய்தி வந்ததுமே, உலக நாடுகள் பலவும் ஆப்கானிஸ்தானில் இருக்கும் தங்கள் நாட்டுத் தூதரகங்களைக் காலி செய்யும் பணிகளைத் தொடங்கின.



அந்த வகையில், இந்தியாவும் அங்குள்ள தமது நாட்டு மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. நேற்று அதிகாலை காபூல் விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது.

இதையடுத்து, 120 இந்திய அதிகாரிகளுடன் காபூலில் இருந்து இந்தியாவுக்கு இரண்டாவது இந்திய விமானப் படை விமானம் புறப்பட்டது.

இந்தியத் தூதர் மற்றும் தூதரக அதிகாரிகள் உள்ளிட்டோருடன் புறப்பட்ட சி–17 ரக விமானம் குஜராத் மாநிலம் ஜாம்நகர் விமான நிலையத்தை வந்தடைந்த அந்த விமானத்தில் இரண்டாவது கட்டமாக இந்திய அதிகாரிகள் நாடு திரும்பியுள்ளனர்.

நாடு திரும்பிய ஆப்கானிஸ்தானுக்கான இந்திய தூதர் ருத்ரேந்திர தாண்டனுடன்ஊடகவியலாளர்கள் உரையாடினர். அப்போது அவர், உங்கள் வரவேற்பு எங்கள் அனைவரின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பாக எங்களை வெளியேற்றிய இந்திய விமானப்படைக்கு நன்றி. நாம் ஆப்கானிஸ்தானின் மக்களைக் கைவிடமாட்டோம். அவர்களின் நலன் மற்றும் அவர்களுடனான நமது உறவு நம் மனதில் அதிகம் உள்ளது.

நாங்கள் அவர்களுடனான தொடர்புகளைத் தொடர முயற்சிப்போம், ஆனால், எந்த வடிவத்தில் என என்னால் சரியாகச் சொல்ல முடியவில்லை நிலைமை மாறி வருகிறது என தெரிவித்திருந்தார்.

## ஸ்டெர்லைட் ஆலைக் கழிவுகளை அகற்றும் வழக்கில்

# தமிழக அரசும் வேதாந்தா நிறுவனமும் பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு




ஸ்டெர்லைட் ஆலையில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அகற்ற உத்தரவிடக் கோரிய வழக்கில் தமிழ்நாடு அரசும், வேதாந்தா நிறுவனமும் பதிலளிக்க வேண்டுமென சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலையால் சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடி நீர் பாதிப்பதாக பொது மக்கள் போராட்டத்தையும், அவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டையும் தொடர்ந்து ஸ்டெர்லைட் ஆலையை கடந்த 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மூடி உத்தரவிட்டது.

இந்த நிலையில் ஆலை வளாகத்தில் உள்ள கழிவுகளை அகற்ற உத்தரவிடக் கோரி பேராசிரியர் பாத்திமா தாக்கல் செய்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கில் கூடுதல் மனுத்தாக்கல் செய்ய மனுதாரருக்கு அனுமதியளித்த நீதிபதிகள், மனுவிற்கு தமிழ்நாடு அரசும் மற்றும் வேதாந்தா நிறுவனமும் பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை 5 வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

இதற்கிடையில், ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்திற்கு நிலம் ஒதுக்கீடு செய்ததை ரத்து செய்து தமிழ்நாடு அரசு பிறபித்த உத்தரவை எதிர்த்து வேதாந்தா நிறுவனம் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்திருந்த வழக்கும் தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, வேதாந்தா நிறுவனம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், ஏற்கனவே ஆலையை மூட வேண்டும் என்று கொள்கை முடிவு எடுத்து அரசு பிறப்பித்த உத்தரவை உறுதி செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும், இதை எதிர்த்து தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் இந்த வழக்கை தள்ளி வைக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட தலைமை நீதிபதி அமர்வு, வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை 6 மாதங்களுக்கு ஒத்திவைத்தனர். மேலும், உச்ச நீதிமன்றம் எந்த உத்தரவு பிறப்பித்தாலும் அதுசம்பந்தமாக முறையீடு செய்து வழக்கை முன்கூட்டியே பட்டியலிடக் கோரிக்கை வைக்க வேதாந்தா நிறுவனத்திற்கு அனுமதி அளித்தும் உத்தரவிட்டனர்.

# குடிசைமாற்று வாரிய குடியிருப்பு தரமாகக் கட்டப்படவில்லை ஒப்பந்தகாரரை உடனே விசாரிக்க கமல்ஹாசன் கோரிக்கை



கே.பி.பார்க் குடிசைமாற்று வாரிய குடியிருப்பு தரமாக கட்டப்படவில்லை

என்ற குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து ஒப்பந்தகாரரை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்திருக்கிறார்.


சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டிருக்கும் கே.பி.பார்க் குடிசைமாற்று வாரியகுடியிருப்புதரமாககட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுவரை கட்டப்பட்ட வீடுகளிலும் அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை என்பதும் கள ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், கமல்ஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில், புளியந்தோப்பு கே.பி. பார்க் பன்னடுக்கு குடியிருப்பு தொட்டாலே உதிர்கிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் எழுதிய செலவுக் கணக்கு சுமார் 15 லட்சம். 1,000 ரூபா எலெக்ட்ரிக் வயருக்குக் கூட ஓராண்டு உத்தரவாதம் உண்டு.

இதைக் கட்டிய ஒப்பந்தகாரரை உடனடியாக விசாரிக்கவேண்டும். மொத்தக் கட்டடத்தையும் இடித்துவிட்டு அதே ஒப்பந்தகாரரின் பணத்தில் புதிதாக கட்ட வைக்கவேண்டும். அரசு இக்கட்டடத்தின் உறுதியை நேரடியாகக் கண்காணிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்.

# முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கொரோனா வைரஸ் தொற்றினால் மரணம்



சம்மாந்துறை வலயத்திலுள்ள இறக்காமக் கோட்டத்தின் முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எ.மஜீட் (வயது 70) கொரோனாத் தொற்றுக் காரணமாக இன்று மரணமானார்.

சுகயீனம் காரணமாக, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, அங்குள்ள கொரோனா விசேட பிரிவில் அவர் சிகிச்சை பெற்று வந்தார் அந்நிலையில், அவர் இன்று காலமானார்.

இறக்காமத்தைச் சேர்ந்த மஜீட், இறக்காமம் பெரிய பள்ளிவாசல் தலைவராகவும் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் கொரோனாவால் 152 பேர் இதுவரையில் மரணம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 3 பேர் கொரோனா வைரஸினால் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, கொரோனாவால் மாவட்டத்தில் உயிரிழந்தவர்களின் மொத்தஎண்ணிக்கை 152 ஆக அதிகரித்துள்ளது என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருமாக 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து கொரோனாவால் இதுவரை 152 மரணங்கள் இடம்பெற்றுள்ளதுடன், 3 வது அலையில் 143 மரணங்களும் அதில் 30 தொடக்கம் 50 வயதுக்கு உட்பட்ட 15 பேரும் 50 வயதுக்கு மேற்பட்டோர் 137 பேரும் மரணமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெல்டாவேரியன் இதுவரையில் உத்தியோகபூர்வமாக கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தும் தொற்று எண்ணிக்கையையும் மரண எண்ணிக்கையினையும் பார்க்கும்போது டெல்டாவேரியன் மட்டக்களப்பில் இருப்பதற்கான சாத்தியம் அதிகளவில் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 'கிராண்ட் மாஸ்டர்' மகுடம் நிந்தவூர் 4 வயதுச் சிறுமிக்கு



அம்பாறை மாவட்டம் நிந்தவூர் முதலாம் பிரிவைச் சேர்ந்த எம் .எல் .எம் .ஜெஸீம், யு .கே . பாத்திமா ஜவ்ஹறா தம்பதிகளின் புதல்வி எம் .ஜெ .பாத்திமா அனத் ஜிதாஹ் கிராண்ட் மாஸ்டர் மகுடத்தையும், ஆசிய நாடுகளின் கொடிகளை மிக வேகமாக அடையாளம் காணக்கூடியவர் Fastest to Identify Flags of all Asian Countries என்ற பட்டத்தையும் வென்று இலங்கை நாட்டுக்கும், தனது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார் .

அனைத்து ஆசிய நாடுகளின் கொடிகளையும் மிக வேகமாக அடையாளம் கண்ட முதல் ஆசிய சிறுமி எனும் மகுடத்தை பெற்றுள்ளார்.

3.12.2016 இல் பிறந்த இவர், தனது 4 வயதில் 48 ஆசிய நாடுகளின் கொடிகளையும் வெறும் 24 வினாடிகளில் வேகமாக அடையாளம் கண்டு ஆசியா சாதனை புத்தகத்தில் தன் பெயரை பதித்துள்ளார்.

சிறுவயதிலேயே சிறந்த ஞாபக சக்தியும் பல திறமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இவர் ஆங்கிலத்தை சரளமாக வாசிக்க எழுத பேச தெரிவதுடன், கணிதம் உள்ளிட்ட பாடங்களிலும் மிக தேர்ச்சியாக திகழ்கின்றார்.

தரம் 4 படிக்கின்ற தகுதி இவருக்குள் இருப்பதாக பெற்றோர்கள் கூறுகின்றனர். Grandmaster எனும் மகுடத்தை பெற்றுக் கொள்கின்ற நிந்தவூர் மண்ணின் இரண்டாவது சிறுமியாக இவர் திகழ்கின்றார்.

# காட்டு யானை அச்சுறுத்தலுக்கு தீர்வு



ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மஜ்மா நகர் மக்கள் மிக நீண்ட காலமாக காட்டு யானைகளின் தாக்கத்தினால் பல இன்னல்களை அனுபவித்து வந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிடைக்கவுள்ளது.

காட்டு யானைகளினால் மஜ்மா நகர் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பல அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதன் தொடரில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியிடமும், அரச அலுவலகங்களுக்கும் காட்டு யானைகளால் இப்பிரதேசம் எதிர்நோக்கும் இன்னல்களை மஜ்மா நகர் சமூக மட்ட அமைப்புக்களூடாக எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பயனாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி மற்றும் பிரதேச செயலகம் மேற்கொண்ட தொடர் தேர்ச்சியான முயற்சியினால் மஜ்மா நகர் பிரதேசத்தினை யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்கான வேலி அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதற்கான பணிகளை முன்னெடுக்கும் நோக்கில் வன ஜீவராசி திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்களான எம்.அஸ்ஹர், எம்.அஸ்வர், காணிப்பிரிவு உத்தியோகத்தர் எம்.முக்சீத், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எம்.சுபைர், எம்.நூர்தீன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம் மற்றும் விவசாய அமைப்பின் பிரதிநிதிகளும் அதற்கான இடங்களைப் பார்வையிட்டனர்.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி, ஓட்டமாவடி பிரதேச செயலாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், வனஜீவராசி திணைக்கள அதிகாரிகாரிகள், கிராம சேவகர்கள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளுக்கும் அல் மஜ்மா கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஏ.எல்.சமீம் பிரதேச மக்கள் சார்பாக மனப் பூர்வமான நன்றிகளைத் தெரிவித்தார்.

வெளிவந்துவிட்டது!

இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் துரித தயார்படுத்தலுக்காக முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் வெளிவந்துவிட்டது!

வெற்றித்தேர்வு விசேட மாதிரி வினாப்பத்திரத் தொகுப்பு




கிடைக்கும் இடங்கள்

சயன்ஸ் அக்கடமி - நல்லூர்
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
பிரபல புத்தக நிலையங்கள் - வடமராட்சி
பாக்கியா புத்தகசாலை - கொக்குவில்
பொதிகை - சாவகச்சேரி
ஜவீஷனா புத்தகசாலை - பரந்தன்
பொதிகை - புதுக்குடியிருப்பு
மகமாரி புத்தகசாலை - மல்லாவி
KPK Book Center - வவுனியா
பிரபல புத்தக நிலையங்கள் - திருகோணமலை
ஷாசியா புத்தகசாலை - மூதூர்
Shakthi Book House - புத்தளம்
அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்
சித்தி விநாயகர் புத்தகசாலை - சுன்னாகம்
இனியா புத்தகசாலை - மானிப்பாய்
அருள் நாயகி - கொடிகாமம்
அறிவுநதி புத்தக நிலையம் - கிளிநொச்சி
ஜோதி புத்தக நிலையம் - மன்னார்
கஜன் சென்ரர் - வவுனியா
ராஜாஸ் புத்தக நிலையம் - மட்டக்களப்பு
பிரபல புத்தக நிலையங்கள் - கொழும்பு
பிரபல புத்தக நிலையங்கள் - கண்டி

தேவையான பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், புத்தகசாலைகள் எம்முடன் தொடர்புகொண்டு விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள முடியும்.

தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு
0775388471, 0773126807, 0212229016

# மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு ஒருவர் வைத்தியசாலையில்

மட்டக்களப்பில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஒருவர் மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள முந்தன்குமாரவேளி ஆற்றில் இன்று காலை மண் அகழ்வில் ஈடுபட்டவர்கள் மீது சிவில் உடையில் சென்ற இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போதே மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த 26 வயதுடைய முருகையா சசிகுமார் என்பவர் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து, குறித்த நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமையுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# ஐ.பி.எல். போட்டிகளை நேரில் காண ரசிகர்களுக்கு அனுமதி கிடைக்கும்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவிருக்கும் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளை நேரில் காண ரசிகர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தகவல் வெளியாகியிருக்கிறது.

இந்தியாவில் இந்தாண்டு திட்டமிட்டதுபோல பார்வையாளர்களின்றி ஐ.பி.எல். போட்டிகள் தொடங்கப்பட்டாலும் கொரோனாப் பாதிப்பு அதிகரித்ததையடுத்து, இடையிலேயே போட்டித் தொடர் நிறுத்தப்பட்டது. நீண்ட ஆலோசனைகளுக்குப் பின்பு ஐ.பி.எல். 2021 சீசனின் எஞ்சியுள்ள ஆட்டங்கள் அனைத்தும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்தது. இதனையடுத்து செப்டெம்பர் 19 முதல் ஒக்டோபர் 15 வரை போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்கேற்பதற்காக சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் உள்ளிட்ட அணிகள் ஏற்கெனவே அங்கு சென்றுவிட்டன. இந்தநிலையில் ஐ.பி.எல். போட்டிகளின் கடைசி ஆட்டங்களை நேரில் காண்பதற்காக ரசிகர்கள் மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என செய்தி வெளியாகியிருக்கிறது. இது குறித்து பேசியுள்ள ஐக்கிய அரபு இராச்சிய கிரிக்கெட் சபையின் செயலாளர் முபாஷிபர் உஸ்மானி ஐக்கிய அரபு இராச்சியத்தில் கிரிக்கெட்டை விரும்பும் பெரும் ரசிகர்கள் இருக்கிறார்கள். எனவே ஐ.பி.எல். போட்டியின்போது மைதானங்களில் 60 சதவீத ரசிகர்களை அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பி.சி.சி.ஐ. மற்றும் ஐ.சி.சியிடம் பேச்சு நடத்தி வருகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்.

*ரி - 20 உலகக் கிண்ணம்*

## தகுதிப் போட்டிகள் அட்டவணை வெளியீடு



ஐ.சி.சி. ரி-20 உலகக்கிண்ணக்கிரிக்கெட் போட்டியில் பிரதான அணிகள்இடம்பெறும் சூப்பர் 12 சுற்றில் பங்கேற்பதற்காகத் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் இரு பிரிவுகளாக 8 அணிகள் மோதுகின்றன.

ஏ பிரிவில் அயர்லாந்து, நெதர்லாந்து, இலங்கை மற்றும் நமீபியா அணிகள் இடம்பெற்றுள்ளன. பி பிரிவில் ஓமன், பப்புவா நியூகினி, ஸ்கொட்லாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இந்த இரு பிரிவுகளிலும் முதல் இரு இடங்கள் பிடிக்கும் அணிகள் பிரதான அணிகளுடன் சூப்பர் 12 சுற்றில் மோதும் வாய்ப்பை பெறும். தகுதிச் சுற்றுப்போட்டிகள் மற்றும் லீக் போட்டிகள் ஒரே நாளில் இரண்டு ஆட்டங்கள் நடைபெறும். அதில் முதல் போட்டி இலங்கை நேரப்படி பிற்பகல் 2 மணிக்கும், இரண்டாவது போட்டி மாலை 6 மணிக்கும் ஆரம்பமாகும்.

**தகுதிச் சுற்றுப் போட்டிகளின் விவரம்**

ஒக்டோபர் 17 – ஓமன் ஙவி பப்புவா நியூ கினி, பங்களாதேஷ் ஷாவி ஸ்கொட்லாந்து

ஒக்டோபர் 18 – அயர்லாந்து VS நெதர்லாந்து, இலங்கை ஙவி நமீபியா

ஒக்டோபர் 19 – ஸ்கொட்லாந்து VS பப்புவா நியூ கினி, ஓமன் ஙவி பங்களாதேஷ்

ஒக்டோபர் 20 – நமீபியா VS நெதர்லாந்து, இலங்கை ஙவி அயர்லாந்து

ஒக்டோபர் 21 – பங்களாதேஷ் VS பப்புவா நியூ கினி, ஓமன் ஙவி ஸ்கொட்லாந்து

ஒக்டோபர் 22 – நமீபியா VS அயர்லாந்து, இலங்கை VS நெதர்லாந்து.

இந்தியாவுடனான 3ஆவது டெஸ்ட் போட்டியில்

## இங்கிலாந்தின் மார்க் வுட் விளையாடுவது சந்தேகம்



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் மார்க் வுட் விளையாடுவது சந்தேகம் எனத் தெரிகிறது.

5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 1–0 என முன்னிலை பெற்றுள்ளது.

லோர்ட்ஸில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்டில் 4 ஆம் நாளன்று இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மார்க் வுட்டுக்குத் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. எனினும் வலியுடன் இந்தியாவின் 2 ஆவது இன்னிங்ஸில் அவர் பந்துவீசினார். இந்தக் காயம் காரணமாக 3 ஆவது டெஸ்டில் மார்க் வுட் பங்கேற்பது சந்தேகம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுபற்றி இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் கிரிஸ் சில்வர்வுட் கூறும்போது, மார்க் வுட்டுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகிறார்கள். அடுத்த சில நாள்களில் அவர் விளையாடுவது குறித்து தெரியவரும். 3 ஆவது டெஸ்ட் நெருங்கும் சமயத்தில் அனைவருடனும் கலந்தாலோசித்து முடிவு எடுப்போம். மார்க் வுட் முழுமையாகக் குணமாகவில்லையென்றால் 3 ஆவது டெஸ்டில் விளையாட அவரைக் கட்டாயப்படுத்தமாட்டோம். போதுமான ஓய்வளித்து அவரைக் கவனித்துக்கொள்வோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## கரீபியன் லீக்கில் ஆப்கானின் புதிய வீரர்கள்



இந்த வருட கரீபியன் பிரீமியர் லீக் (சி.பி.எல்.) ரி-20 தொடரில் மூன்று புதிய ஆப்கானிஸ்தான் வீரர்கள் விளையாடவுள்ளனர். சி.பி.எல். போட்டித்தொடர், ஓகஸ்ட் 26 முதல் செப்டெம்பர் 15 வரை மேற்கிந்தியத் தீவுகளின் செயிண்ட் கிட்ஸில் நடைபெறவுள்ளது. 33 ஆட்டங்களிலும் 50% பார்வையாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ரஷிட் கான், மொஹமட் நபி, முஜிபுர் ரஹ்மான் ஆகிய பிரபல ஆப்கானிஸ்தான் வீரர்கள் இந்த வருட சி.பி.எல். போட்டித் தொடரில் பங்கேற்கவில்லை. பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மூவரும் தேசிய அணிக்காக விளையாடவுள்ளனர். அதனால், அவர்களுக்குப் பதிலாக குவாயிஸ் அஹமட், நவீன் உல்ஹக், வகார் சலாம்கெல் ஆகிய மூன்று ஆப்கானிஸ்தான் வீரர்கள் இந்த வருட சி.பி.எல். போட்டித் தொடரில் பங்கேற்கிறார்கள். ஜமைக்கா அணியில் குவாயிஸ் அஹமதும் கயானா அணியில் நவீன் உல்ஹக், வகார் சலாம்கெல் ஆகியோரும் இடம்பெற்றுள்ளார்கள்

# வைத்திய நிபுணர்களின் கருத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்!

## வலியுறுத்துகிறார் அத்துரலிய ரத்ன தேரர்



கொவிட் வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதில் இராணுவத்தை இணைத்துக்கொள்ள வேண்டியது அவசியமே, ஆனால் தீர்மானம் எடுக்கும் சக்தியாக வைத்திய அதிகாரிகளே இருக்க வேண்டும்.

அவர்களைக் கொண்டே நிலைமைகளை கையாள வேண்டுமென ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

எந்தவித அடிப்படையும் இல்லாது அரசாங்கம் அமைச்சரவையை உருவாக்கியுள்ளது எனவும் அவர் விமர்சித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை), வைரஸ் தொற்று (கொவிட்-19) (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் இரண்டம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்,

அவர் மேலும் கூறுகையில்–

கொவிட் கட்டுப்பாட்டு குழுவில் ஆயுர்வேத மற்றும் பாரம்பரிய வைத்தியர்களின் பங்களிப்பு குறைவாகவே கிடைக்கின்றது.

ஆனால் ஆயுர்வேத மருத்துவத்தைக் கொண்டும் மக்களுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீடுகளில் ஆயுர்வேத மூலிகைகளை வளர்க்க வேண்டும். தேசிய ஒற்றுமையை இந்த விடயத்தில் உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இன்று நாட்டில் மக்கள் உயிரிழக்கின்றனர். அவர்களை பார்த்து கவலைப்பட்டுக்கொண்டு இருக்க முடியாது. உடனடியாக இந்த நிலைமைகளைத் தடுக்க வேண்டும். ஏனைய அனர்த்தங்களில் சகலரும் ஒன்றிணைய முடியும் ஆனால் இதில் அவ்வாறு ஒன்றிணைய முடியாது.

ஆகவே மக்களை தெளிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொலைக்காட்சிகளில் நாடகங்கள், விளையாட்டுக்களை மட்டுமே காட்டிக்கொண்டு இருக்காது மக்களை தெளிவுபடுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.



# வாகனங்கள் கொள்வனவுக்கு அனுமதி கோருகிறார் பஸில்

164 வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சரவையில், அனுமதி கோரியுள்ளார்.

அத்தியாவசிய சேவைகளுக்காக இவ்வாறு இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

நோயாளர் அம்புலன்ஸ்கள், நீர் தாங்கி வாகனங்கள், டபள் கப் வாகனங்கள் உள்ளிட்ட 164 வாகனங்கள் இவ்வாறு கொள்வனவு செய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமைச்சரவையால் சில வகை வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட அனுமதியைப் பயன்படுத்தி இந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னதாக ஜீப்கள் கொள்வனவு செய்வதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# விபத்தில் தாய் சாவு மகன் படுகாயம்

தனமல்வில – எம்பிலிபிட்டிய பிரதான வீதியின் செவனகல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் நபர் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உள்ளார்.

எம்பிலிபிட்டியவில் இருந்து தனமல்வில நோக்கிப் பயணித்த கப் வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கப் பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 56 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் கப் வாகனத்தின் சாரா பலத்த காயமடைந்துள்ளார்.

அம்பேகமுவ பகுதியைச் சேர்ந்த தாய் உயிரிழந்துள்ளமையுடன் மகனே இவ்வாறு காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் செவன கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் உடன் தகவல்களை வெளியிடவும்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் சட்டமா அதிபர் தப்புல தலிவேரா கண்டுபிடித்த தகவல்களை உடனடியாக நாட்டுக்கு வெளியிட வேண்டும் என அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரையில் எவ்வித நீதியும் நிலைநாட்டப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்திற்கு சர்வதேச ஒத்துழைப்பை பெறுமாறு வழியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் செப்டெம்பர் 30 ஆம் திகதிக்குள் தடுப்பூசி

18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்குள் தடுப்பூசி செலுத்தி முடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்காக 90 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகளும் 1.4கோடி பைசர் தடுப்பூசிகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியா வடக்கு பிரதேச செயலருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன் மற்றும் அங்கு பணிபுரியும் இரு உத்தியோகத்தர்களுக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மற்றும் அங்கு கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், பிரதேச செயலகத்தில் பணிபுரியும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு இன்று சுகாதாரப் பிரிவினரால் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# 3 லட்சத்து 60 ஆயிரம் லீற்றர் ஒட்சிசனை கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி

கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக தேவையான 3 லட்சத்து 60 ஆயிரம் லீற்றர் ஒட்சிசனைக் கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# இலங்கை ரூபாவின் மதிப்பை குறைக்க உரிமம்பெற்ற வங்கிகள் கோரவில்லை

உடனடியாகச் செயற்படும் விதத்தில் இலங்கை ரூபாவை மதிப்புக் குறைக்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளால் உத்தியோகபூர்வமாக கோரப்பட்டுள்ளன என்ற செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றமையை இலங்கை மத்திய வங்கி அவதானித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அத்தகைய செய்திகள் எவ்வித்திலேனும் அடிப்படையற்றவை என பொதுமக்களுக்கு அறிவித்துள்ளதுடன் செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதன் மீதான இலங்கை மத்திய வங்கியின் நிலைக்கு அல்லது தொழிற்பாட்டு ரீதியான ஏற்பாடுகளுக்கு இலங்கை மத்திய வங்கி எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் வழமையான ஊடகங்கள் ஊடாகவும் பரப்பப்பட்டு வருகின்ற தவறானதும் தவறாக வழிநடத்துகின்றதுமான தகவல்களை நம்பவேண்டாம் எனவும் பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி விடுக்கும் ஏதேனும் உத்தியோகபூர்வ அறிக்கை, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், துணை ஆளுநர் அல்லது பெயர் மற்றும் பதவி மூலம் அடையாளப்படுத்தப்படுகின்ற இலங்கை மத்திய வங்கியின் எவரேனும் வேறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலமே வழங்கப்படும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.08.2021இல் வெளியிடப்பெற்றது.